ஆசிரியரிடமிருந்து........!

# ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பம்



நமது கர்த்தர் குடும்பத்தை ஏற்படுத்தி அதை ஆசீர்வதித்தார் (ஆதி.1:27,28). ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பத்திற்கான அனைத்து ஆலோசனைகளையும் வேதத்தில் நமக்கு தந்திருக்கிறார். குடும்பத்தை முக்கியப்படுத்தி எழுதப்பட்டுள்ள 127 மற்றும் 128ம் சங்கீதங்களை தியானிப்பது ஆசீர்வாதத்தை நமக்குக் கொண்டு வரும். இவ்விரு சங்கீதங்களும் தேவனோடு சரியான உறவு, மகிழ்ச்சியுள்ள திருமண வாழ்க்கை மற்றும் குடும்பத்திற்குத் தேவன் தரும் ஆசீர்வாதங்களைக் குறித்து நமக்குப் போதிக்கிறது. தேவன் நமது குடும்பங்களை இவ்வசனங்களின் மூலம் ஆசீர்வதிப்பாராக.

## 1.குடும்பத்தின் அஸ்திபாரம்

நமது குடும்பத்தைக் கட்டுகிறவர் கர்த்தர். தேவன் நமது குடும்பத்தை ஆசீர்வதிக்க, நாம் அவரது வசனத்தின்படி சரியான அஸ்திபாரம் போடுவது மிகவும் அவசியம்.

### A) கர்த்தருக்குப் பயப்படும் பயம் (FEAR OF GOD)

சங்கீதம் 128:1,4 வசனங்கள் கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் பாக்கியவான் என்று கூறுகிறது. நல்ல குடும்பம் உண்டாயிருக்க, குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தேவனுக்குப் பயந்து வாழ வேண்டும். பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையிலும், வார்த்தையிலும் தேவ பயத்தைக் காண்பித்துத் தங்கள் பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும். தேவன் பரிசுத்தமுள்ளவர், நீதியுள்ளவர் என்பதையும் பாவத்தின் விளைவுகள் கடுமையானது என்பதையும் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். தேவ பயமில்லாத வீட்டில் தேவ ஆசீர்வாதம் தங்காது. தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம் (நீதி.8:13). மறைவான, துணிகரமான பாவங்கள், பொய்கள், கெட்ட வார்த்தைகள், அசுத்தமான புஸ்தகங்கள் இவைகளை நாம் வீட்டிலிருந்து அகற்ற வேண்டும். இப்படி உங்கள் குடும்பத்திலுள்ள யாவருக்கும் கர்த்தருக்குப் பயப்படும் பயம் உண்டா?

### B) கர்த்தரின் வழியில் நடத்தல் (FOLLOW THE WAYS OF GOD)

கர்த்தரின் வழியில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்று சங்கீதம் 128:1 கூறுகிறது. இது கர்த்தருடைய வசனத்திற்குக் கீழ்படிந்து வாழ்வதைக் குறிப்பிடுகிறது. பிள்ளைகள் தங்கள் பெற்றோர் தேவனை நேசிக்கிறார்களா? அவரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ்கிறார்களா? என்பதைப் பார்க்க விரும்புகிறார்கள். நாம் குடும்பமாக வேதத்தை வாசித்து ஜெபித்து அவர் வழிகளை அறிந்து அதில் நடக்கத் தீர்மானிக்க வேண்டும். நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் தேவனை அனுதினமும் தேடி அவருக்குக் கீழ்ப்படிகிறீர்களா?

### C) கர்த்தர் மேல் விசுவாசம் (HAVE FAITH IN GOD)

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா

(சங்.127:1) என்று வேதம் கூறுகிறது. சங்.127:1,2,3, வசனங்களில் மூன்று முறை 'விருதா' என்ற வார்த்தை வருகிறது. தேவன் இல்லாத அனைத்து காரியமும் வீணானது. அர்த்தமற்றது. ஆகவே தேவன் நமது குடும்பத்தை ஆசீர்வதிக்க அவரையே எப்பொழுதும் நோக்கிப் பார்த்து அவர்மேல் முழு நம்பிக்கை வைக்க வேண்டும். அவரை முற்றிலும் சார்ந்திருந்து அவரிடத்தில் ஜெபிக்க வேண்டும். நமது குடும்பத்தார் யாவரும் தங்கள் படிப்பு, வேலை இவைகளைப் பார்க்கிலும் தேவனோடு தங்களுக்கு உள்ள உறவுக்கு அதிகமான முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுக்க வேண்டும். ஏனெனில் "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவரது நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்" என்று இயேசு சொன்னார் (மத்தேயு 6:33). இயேசு நம்முடைய வாழ்க்கையில் முதலாவதாகவும், மையமாகவும், அஸ்திபாரமாகவும் இருப்பாரென்றால் நமது குடும்பம் ஆசீர்வதிக்கப்படும்.

## 2.குடும்பத்தின் அழகு

ஒரு குடும்பத்தின் அழகு அந்தக் குடும்பத்தின் அங்கத்தினர்கள் தங்களுக்குத் தேவன் தந்த பொறுப்புகளையும் கடமைகளையும் சரியாக நிறைவேற்றுவதில் இருக்கின்றது. இது குறித்து சங்கீதம் 127 & 128 கூறும் காரியங்களைப் பார்ப்போம்.

### A) கணவன் குடும்பத்தின் தலை (HEAD)

ஒரு குடும்பத்தில் தகப்பன் அல்லது கணவன் தலைவராக இருக்கிறார். அவர் கர்த்தருக்குப் பயந்து அவர் வழியில் நடக்க வேண்டும் (128:1). ஒரு சிறந்த மாதிரியாக எல்லாவற்றிலும் விளங்க வேண்டும். குடும்பத்தை நன்றாக நடத்த தெய்வீக ஞானத்தைக் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தன் குடும்பத்திற்கு ஒரு நல்ல ஆசாரியனாக இருந்து வேத வசனத்தைப் போதித்துப் (உபா.6:5-9), பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற போதனையில் வளர்க்க வேண்டும். (எபே.6:4; ஆதி.18:19). மனைவியை நேசித்து, கனப்படுத்தி, காப்பாற்ற வேண்டும் (எபே.5:25; 1பேதுரு3:7). தன் மனைவியுடன் எப்பொழுதும் இசைந்திருந்து அவளை உலகத்திலேயே சிறந்த நபராகக் கருதி நேசிக்க வேண்டும் (ஆதி.2:24; மத்.19:3-6; எபே.5:31).

மேலும் கணவன் தன் கைகளின் பிரயாசத்தினால் சாப்பிட வேண்டும் என்று இந்த சங்கீதம் கூறுகிறது (128:2). கணவன் தன் குடும்பத்தினரின் சரீர, ஆவிக்குரிய தேவைகளையும் சந்திக்கிறவராகக் காணப்பட வேண்டும். தன் குடும்பத்தை நன்றாகக் கவனிக்க வேண்டும் (1தீமோ.5:8). இதை படித்துக்கொண்டிருக்கும் என் அருமையான சகோதரர்களே, உருப்படியான வேலை செய்து, உண்மையாய் அதை செய்து குடும்பத்தை ஆதரிக்க வேண்டியது உங்களுடைய பொறுப்பு. தகப்பனாகிய நீங்கள், கணவராகிய நீங்கள் அந்த பொறுப்பிலிருந்து தவறுவீர்களானால் உங்கள் குடும்பம் சிதறிவிடுமே! நீங்கள் கர்த்தருக்கு கணக்கு கொடுக்கவேண்டும். கணவர் ஒருவேளை நோய்வாய்பட்டு அல்லது ஊனமுற்று வேலை செய்யமுடியாத நிலையில் இருந்தால் அது வேறே காரியம். ஆனால் சுகமிருந்தும், பெலமிருந்தும் வேலை செய்ய மனமில்லாமல் இருந்தால் அதுதவறு. குடும்பத்தை ஆதரிப்பது கணவரின் பொறுப்பாகும் என்பது தேவனுடைய திட்டமாகும். அதனாலே மனைவி வேலை செய்யக்கூடாது என்று நான் சொல்லவில்லை, வேதமும் போதிக்கவில்லை. மனைவி வேலை செய்தாலும், குடும்பத்தை ஆதரிக்கும் முக்கியமான பொறுப்பு கணவருக்கு உரியது.

### B) மனைவி குடும்பத்தின் இருதயம் (HEART)

ஒரு குடும்பத்தில் தாய் அல்லது மனைவி இதயமாக இருக்கிறாள். ஒரு சரீரத்தின் சிறப்பான செயல்பாட்டிற்கு தலையும் இருதயமும் எவ்வளவு முக்கியமோ, அதைப்போலக் குடும்பத்திலும் கணவன் மனைவி இருவரின் சிறந்த செயல்பாடு

அவசியம். ஒரு குடும்பத்தில் மகிழ்ச்சி, துடிப்பு, புத்துயிர் ஆகியவற்றைக் கொண்டு வருவது தாய். ஒரு வீட்டுக்கு ராணி யார்? மனைவிதான், தாய்தான். அவள் தன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைச் செடியைப்போல இருக்க வேண்டும் (சங்.128:3). மனைவியின் பிரதான கடமை வீட்டிற்குள் இருக்கிறது. வெளியே சென்று வேலை செய்து சம்பாதிப்பது தவறல்ல. ஆனால் தன் வீட்டுப் பொறுப்புகளைச் சரியாகக் கவனிக்காமல் அப்படி செய்யும்போது வீட்டின் மகிழ்ச்சியை இழக்க நேரிடும். அதனாலே மனைவிமார் வீட்டுக்குள்ளேயேதான் இருக்க வேண்டும், வெளியே வேலை செய்யக்கூடாது, சமூகசேவை தேவையில்லை, சபை ஊழியம் தேவையில்லை என்று வசனம் சொல்லவில்லை. தாராளமாய் சபை ஊழியம், சமூகசேவை, வெளியே வேலை அனைத்தையும் செய்யலாம். ஆனால் வீட்டை உதாசீனம் செய்யாதீர்கள், உங்கள் குடும்ப பொறுப்பை உதாசீனம் செய்யாதீர்கள். அது கர்த்தரின் ஒழுங்குக்கு மாறாக செல்வதாகும்.

மேலும் மனைவி தன் புருஷனை நேசித்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (எபே.5:23;1பேதுரு 3:1;தீத்து2:4). தன் பிள்ளைகளுக்கு தேவ அறிவையும், தெய்வீக மதிப்பீடுகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும் (1 தீமோ.1:5; 3:15). புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் (நீதி.14:1). அவள் குடும்பத்திற்கு அழகையும், ஒழுங்கையும் அமைதியையும் கொண்டு வருகிறாள் (நீதி.31: 10-31).

### C) பிள்ளைகள் கர்த்தருடைய சுதந்திரம் (HERITAGE)

பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், அவரால் கிடைக்கும் பலன் (சங்.127:4). அவர்கள் ஒலிவமரத்தின் நிழலில் வளரும் ஒலிவமரக் கன்றுகள் (சங்.128:4). இது எதைக் காட்டுகிறது? பாதுகாப்பைக் காட்டுகிறது. இன்றைக்கு அநேக வீடுகளிலே குடும்பங்களிலே பாதுகாப்பு உணர்வு கிடையாது. பிள்ளைகளுக்குத் தேவையானது பாதுகாப்பு. ஒரு வீட்டிலே அம்மாவும், அப்பாவும் நாயும் பூனையும் போல சண்டை போட்டால், பிள்ளைகளுக்கு எப்படி பாதுகாப்பு உணர்வு இருக்கும்? ஆகவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல பாதுகாப்பான சாதகமான ஆவிக்குரிய சூழ்நிலையை உருவாக்கித் தர எல்லா விதத்திலும் முயற்சிக்க வேண்டும். பிள்ளைகள் பலவான் கையிலுள்ள வல்லமையான, சக்தி நிறைந்த அம்புகள் (சங்.127:5). அவர்கள் சரியான பாதையில் செல்ல அவர்களை பெற்றோர்கள் கவனமாக கையாள வேண்டும்.

மேலும் பிள்ளைகளாயிருக்கிறவர்கள் தங்களுக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் பூமியிலே தங்கள் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து அவர்களைக் கனப்படுத்த வேண்டும் என்று வேதம் கூறுகிறது (எபே.6:1-3; யாத்.20:12).

## 3. குடும்பத்தின் ஆசீர்வாதங்கள்

நாம் தேவனுடைய வழிகளில் நடக்கும்போது பல ஆசீர்வாதங்களை இந்த இரண்டு சங்கீதங்களில் தேவன் நமக்கு வாக்குப்பண்ணியுள்ளார். "கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்" (சங்.128:5) என்று வசனம் கூறுகிறது. ஏன் சீயோன் இங்கு குறிக்கப்படுகிறது? சீயோன் என்பது கிருபையைக் காட்டுகிறது. "சீனாய் மலை" நியாயப்பிரமாணத்திற்கு அடையாளமாயிருக்கிறது. "சீயோன் மலை" கிருபைக்கு அடையாளமாயிருக்கிறது. குடும்ப வாழ்விலே கிருபையாக தேவன் நமக்கு ஆசீர்வாதங்களை தருகிறார்.

### A) சமாதானம் (PEACE)

இன்று அநேகர் கடினமாக உழைத்தும் வருத்தத்தின், துன்பத்தின் அப்பத்தை சாப்பிடுகிறார்கள். அவர்கள் மனதில் சமாதானமும் மகிழ்ச்சியும் இல்லை (127:3). ஆனால் நாம் கிறிஸ்துவை நம் வாழ்வின் மையமாக வைத்து வாழும் போது எல்லா புத்திக்கும் மேலான ஒரு தேவ சமாதானத்தை தேவன் நமக்கு தருகிறார் (பிலி.4:7).

நமக்கு நிம்மதியான பயமும் கவலையும் இல்லாத தூக்கத்தைத் தருகிறார் (127:3). நாம் தேவனைச் சார்ந்து அவரை நம்பிக் காரியங்களைச் செய்யும்போது, நமக்குள் ஒரு பூரண சமாதானம் உண்டாயிருக்கும் (ஏசாயா 26:3) என்று வேதம் கூறுகிறது. நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய்; நீ படுத்துக் கொள்ளும்போது உன் நித்திரை இன்பமாயிருக்கும் (நீதி. 3 : 24).

### B) பாதுகாப்பு (PROTECTION)

கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா என்று வேதம் கூறுகிறது (சங்.127:2). நமக்கு மனிதனின் பாதுகாப்பு மட்டும் உதவாது. தேவனுடைய பாதுகாப்பு மிகவும் அவசியம். பல இடங்களில் காவலர்கள் இருந்தபோதும் திருட்டு, கொள்ளை, கொலை இவைகளைக் குறித்துத் தினமும் கேள்விப்படுகிறோம். ஆனால் நம்முடைய கர்த்தரோ நம்மைத் தூங்காமல் உறங்காமல் காக்கிறவர் (சங்.121:4). அவர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். அவர் உன் போக்கையும் வரத்தையும் காப்பார் (சங்.121:7,8). உன்னைச் சூழ தேவ தூதர்கள் பாளயமிறங்கிக் காப்பார்கள் (சங்.34:6).

### C) நன்மையும், செழிப்பும் (PROSPERITY).

உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் என்று சங்.128:2-ல் தேவன் வாக்குப்பண்ணியுள்ளார். உங்கள் பிரயாசத்தின் பலனை சத்துரு கொண்டு செல்லாதபடிக்கு தேவன் உங்கள் பொருளாதாரத்தை ஆசீர்வதித்து எல்லாத் தேவையற்ற செலவுக்கும் விலக்கி காப்பார். கர்த்தர் உனக்கு தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார். நீ அநேகம் மக்களுக்குக் கடன் கொடுப்பாய். கர்த்தர் நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார் (உபா.28: 8,12).

### D) நீடித்த ஆயுசு (PROLONGED LIFE)

சங்கீதம் 128:6ல் நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பாய் என்று வேதம் கூறுகிறது. நீடித்த ஆயுசு தேவனுடைய ஆசீர்வாதத்திற்கும் அவருடைய கிருபைக்கும் அடையாளமாக இருக்கிறது. யோபு நான்கு தலைமுறையாகவும், யோசேப்பு மூன்று தலைமுறையாகவும் தங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளைக் கண்டதுபோல நீங்கள் தேவனுக்கு பயந்து அவருக்குக் கீழ்ப்படிந்து தேவன் உங்களுக்கு நியமித்திருக்கிற பூரண வாழ்வை வாழ கிருபை அருளுவார் (யோபு 42:16; ஆதி.50:23).

### E) நோக்கமுள்ள வாழ்வு (PURPOSEFUL LIFE)

"நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய். இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்" (சங்.128:5,6). நானும், என் குடும்பமும், என் பிள்ளைகளும் என்று வாழ்வது தேவனின் நோக்கமல்ல. நம்முடைய குடும்ப வாழ்வின் மூலமாய் கர்த்தரின் திட்டம் நிறைவேற வேண்டும். அவருடைய இரட்சிப்பின் திட்டம் நம் குடும்பத்தின் மூலம் நிறைவேற வேண்டும். மற்றவர்கள் அவரைப்பற்றி அறியவேண்டும். அவருடைய சபை வளரவேண்டும். இதைத் தான் 5,6 ஆகிய வசனங்களிலே இஸ்ரவேல், எருசலேம் என்று கூறுகிறார். குடும்ப வாழ்வுக்கும், எருசலேமுக்கும், இஸ்ரவேலுக்கும் என்ன சம்பந்தம்? குடும்ப வாழ்வின் மூலமாக எருசலேம் வாழும், இஸ்ரவேல் கட்டப்படும். நமக்கு சபை கட்டப்படும் என்று இதை நாம் பொருள்படுத்தலாம். ஆகையால் என் அருமையான சகோதரரே, சகோதரிகளே உங்கள் குடும்ப வாழ்வு மற்றவர்களின் ஆத்தும இரட்சிப்புக்காக, சபையின் நல்வாழ்வுக்காக பயன்பட வேண்டுமே! இப்படிப்பட்ட குடும்ப வாழ்வை விரும்புவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி தெற்கு மண்டலம்.